# சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் சார்க்நாகள் சக அமைச்சரளுடன் இருதரப்பு கலந்துரையாடல்

சார்க் நாடுகளை சேர்ந்த பல்வேறு சுற்றாடல், வனவியல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு பொறுப்பான அமைச்சர்களுடன் சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார். 2022 நவம்பர் 06 முதல் 18 வரை எகிப்தில் ஷர்ம் எல்-ஷேக்க நகரில் நடைபெற்றுவரும் ஐ.நா காலநிலை உச்சி மாநாட்டோடு (COP27) இணைந்ததாக அமைச்சர் அஹமட் அவர்களைச் சந்தித்துள்ளார். இந்த கலந்துரையாடல்கள் சார்க்கின் பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பின் முழுதுமளாவிய பின்னணியினுள் பரஸ்பர சுற்றாடல் தொடர்பான விவகாரங்களில் நெருக்கமாக பணியாற்ற வேண்டியதன் தேவையை மையப்படுத்தியதாக அமைந்திருந்தது.

அதன்படி, அமைச்சர் அஹமட் பங்களாதேஷ், மாலத்தீவு மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த மூன்று அமைச்சர்களான பங்களாதேஷின் சுற்றுச்சூழல் அமைச்சர் எம்.டி. ஷஹாப் உடின், மாலத்தீவுகள் குடியரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் மேதகு அமினாத் ஷெளனா மற்றும் நேபாளத்தின் பெண்கள், சிறுவர்கள்கு மற்றும் சிரேட்ட பிரஜைகள் அமைச்சர் மாண்புமிகு. திருமதி உமா ரெக்மி ஆகியோருடன் இருதரப்பு சந்திப்புகளை நடத்தியுள்ளார்

தெற்காசியப் பிராந்தியத்தில் காலநிலை மாற்றத்தால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நாடாக இலங்கையானது நீண்டகால வறட்சி மற்றும் கடுமையான மழைப்பொழிவை அனுபவித்து வருவதாகவும், காலநிலை அனர்த்தங்களினால் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் மீள்தன்மையை அதிகரிப்பதற்கு நாடு செயற்பட்டு வருவதாகவும் அமைச்சர் நசீர் அஹமட் இந்த சந்திப்புகளின்போது வலியுறுத்தினார். 2022 – 2030 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய சுற்றாடல் செயற்திட்டத்தை (NEAP) இலங்கை வெளியிட்டுள்ளது என்றும், காலநிலை மாற்றத்திற்கான சிறந்த மாதிரிகளை நாடு ஆராய்ந்து வருவதாகவும், மூன்று அமைச்சர்களும் தங்களின் சிறந்த தேசிய/துணை தேசிய பொறிமுறைகள்/மாதிரிகளை இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். திட்டத்தின் இலக்குகளை அடைய தங்களின் சொந்த காலநிலை மாற்றியமைத்தல் தலையீடுகளிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களை இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளுமாறு அமைச்சர் அஹமட் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் கேட்டுக்கொண்டார்.

தெற்காசியாவில் இடம்பெறும் எல்லை தாண்டிய மாசுறுதல் பிரச்சினையை எடுத்துரைத்த அமைச்சர் அஹமட், இந்தியப் பெருங்கடல் மற்றும்

வளிமண்டலத்தில் நடைபெற்று வருகின்ற எல்லை தாண்டிய காற்று/பிளாஸ்டிக்/இரசாயன மாசடைதல் குறித்து இலங்கை கவலை கொண்டுள்ளது என்று அந்தந்த இருதரப்பு சந்திப்புகளின் போது மூன்று அமைச்சர்களுக்கும் தெரிவித்தார். எல்லை தாண்டிய மாசடைதலை நிவர்த்தி செய்வதில் பிராந்திய மாதிரிகள்/ பொறிமுறைகளைத் தேடுவதில் பல மாசடைதல்களை நிவர்த்தி செய்வதில் மூன்று சார்க் நாடுகளுடன் மேலும் ஒத்துழைக்க இலங்கை விரும்புவதாக அவர் கூறினார்.

பங்களாதேஷின் சுற்றாடல் அமைச்சர் எம்.டி. ஷஹாப் உதீனுடனான இருதரப்பு கலந்துரையாடலின் போது, அமைச்சர் அஹமட், தெற்காசிய பிராந்தியத்தில் எல்லை தாண்டிய வளி மாசடைதல் குறித்து குறிப்பாக இலங்கை தீவிர கரிசனை கொண்டுள்ளதாகவும் அண்டை நாடுகளின் வளி மாசடைதலால் இலங்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். இரு அமைச்சர்களும் வளி மாசடைதல் குறித்த தங்கள் கருத்துக்களை கலந்துரையாடியதோடு எல்லை தாண்டிய வளி மாசுறுதலை தடுப்பதற்கான எந்தவொரு முன்னேற்றகரமான பிராந்திய ஒப்பந்தத்திலும் ஒருவருக்கொருவர் இணைந்து செயற்படவும் இணக்கம் தெரிவித்தனர்.

கலந்துரையாடப்பட்ட மற்றொரு துறை சதுப்புநிலங்களை மீட்டெடுப்பது பற்றியதாகும். நான்காவது ஐ.நா.சுற்றாடல் பேரவையில் இந்தோனேசியாவுடன் சமர்ப்பித்த தீர்மானத்தில் சதுப்புநில மறுசீரமைப்புக்கு இலங்கை தலைமை தாங்குவதாகவும் தேசிய அளவில் சதுப்புநில வழிகாட்டுதல்களை இலங்கை பூர்த்தி செய்துள்ளதாகவும் குறிப்பாக பங்களாதேஷ் மற்றும் மாலைதீவுகளுடன் தனது அனுபவத்தை பகிர்ந்து கொள்ள முடியும் என்றும் அமைச்சர் அஹமட் தெரிவித்தார். தேசிய/பிராந்திய சதுப்புநில மறுசீரமைப்பு திட்டங்களுக்கு இலங்கையுடன் ஒத்துழைக்க இரு அமைச்சர்களும் இணக்கம் தெரிவித்தனர்.

மாலத்தீவு குடியரசின் சுற்றாடல், காலநிலை மாற்றம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் மேதகு அமினாத் ஷௌனாவுடனான இருதரப்பு கலந்துரையாடலின் போது, அமைச்சர் அஹமட், இலங்கையானது வனவிலங்குகள், கடற்கரைகள் மற்றும் புராதன பாரம்பரிய இடங்களால் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு சுற்றுலாத் தலமாகும். எவ்வாறாயினும், தீவு உல்லாச விடுதிகளை அபிவிருத்தி செய்வதில் நாடு குறைவாகவே கவனம் செலுத்தியுள்ளது எனவும் இதுதொடர்பில் மாலைதீவுகள் இலங்கையுடன் அனுபவங்களையும் தொழில்நுட்பங்களையும் பகிர்ந்து கொள்ள முடியும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார். இதற்கு பதிலளித்த மாலைதீவு அமைச்சர், இலங்கையில் தங்களின் நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைவதாகக் கூறியதுடன், இரு நாடுகளும் எதிர்கொள்ளும் சுற்றாடல் பிரச்சினைகள் இயற்கையில் ஒரே மாதிரியானவை

என்பதை சுட்டிக் காட்டினார். காலநிலை பேச்சுவார்த்தைகள், குறிப்பாக காலநிலை நிதியளித்தல் மற்றும் இழப்பு மற்றும் சேத மதிப்பீடு மற்றும் இழப்பீடு பகுதிகளில் இலங்கையின் நிபுணத்துவத்தை பெறுவதில் மாலைதீவு மகிழ்ச்சியடைவதாக அவர் மேலும் கூறினார்.

நேபாளத்தின் பெண்கள், சிறுவர்கள் மற்றும் சிரேட்ட பிரஜைகள் கௌரவ அமைச்சர் திருமதி உமா ரெக்மி, அவர்களுடனான இருதரப்பு சந்திப்பில் உள்நாட்டில் உள்ள சுற்றாடல் பிரச்சனைகள் குறித்து கவனம் செலுத்தினார். நேபாளம் நிலத்தால் சூழப்பட்ட நாடாக இருப்பதால், தமக்கு கடுமையான உள்நாட்டு சுற்றாடல் பிரச்சினைகள் இருப்பதாகவும், அதற்காக இலங்கை போன்ற அண்டை நாடுகளின் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் நேபாள அமைச்சர் தெரிவித்தார்.

மொத்தத்தில், சர்வதேச அரங்கில் அந்தந்த நாடுகளின் காலநிலை பாதிப்பு குறித்து பிராந்திய கூட்டணியாக குரல் எழுப்பவும் மேலும் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட காலநிலை நிதியைக் கோரவும் அனைத்து அமைச்சர்களிடமும் ஒரு பலமான ஆர்வம் இருந்தது. பவளப்பாறை முகாமைத்துவம், வனவியல், இயற்கை பாதுகாப்பு, வாழ்வாதார அபிவிருத்தி ஆகிய துறைகளில் இலங்கையின் கல்வியாளர்கள் நிபுணத்துவம் பெற்றுள்ளனர் என்பதை மூன்று அமைச்சர்களும் அங்கீகரித்ததோடு கூட்டாக இணைந்து செயற்படல் அல்லது நிகழ்ச்சித்திட்டங்களின் பரிமாற்றத்தை பெறவும் ஆர்வத்தை கொண்டிருந்தனர்.

சந்திப்புகள் கள் மிகவும் சுமுகமான மற்றும் நட்பு ரீதியான சூழலில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



சுற்றாடல் அமைச்சர் நசீர் அகமது பங்களாதேஷின் சுற்றாடல் அமைச்சர் முஹமட் ஷஹாப் உதீன் மற்றும் பங்களாதேஷின் சுற்றாடல், காடுகள் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான அமைச்சின் செயலாளர் டாக்டர் ஃபர்ஹினா அஹமட் ஆகியோருடன் கலந்துரையாடும் போது.




சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் , மாலத்தீவு குடியரசு சுற்றாடல், காலநிலை மாற்றம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் அமிநாத் ஷெளனா உடனான சந்திப்பின் போது



சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் அவர்கள், நேபாளத்தின் பெண்கள், சிறுவர்கள் மற்றும் சிரேட்ட பிரஜைகள் அமைச்சர் திருமதி உமா ரெக்மி அவர்களுடனான சந்திப்பின்போது.